Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ௵ ஆகஸ்டு ௴ 15௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 22

## தூரக்கிழக்கரங்கத்தில் நெருக்கடியான நிலைமை.

### தாய்லாந்தைப்பற்றி ஜப்பானின் நோக்கம்.

### நான்கு குடியரசுகளின் தயாரான ஏற்பாடுகள்.

### "சிங்கப்பூர், ஆஸ்திரேலியாவின் எல்லை."

தூரக்கிழக்கரங்கத்தில் நெருக்கடியான நிலைமை இருந்துவருகிறது. ஜப்பானியப் பத்திரிகைகளும், ஜப்பானிய ராஜதந்திரிகளும் முன்பிருந்ததுபோல் வீண் புரளிகளும், ஆர்பாட்டங்களும் செய்துகொண்டு வருவதிலிருந்து, உண்மையான நோக்கம் இன்னும் விளக்கமாகத் தெரிகிறது. ஜப்பானிய அடல்நாட்டு மந்திரி, அட்மிரல் தோயாடாவை, ஜெர்மனி, இத்தாலி இவைகளின் செய்தி நிலையங்களின் டோக்கியோ நிருபர் சில கேள்விகள் கேட்டார். அவைகளுக்கு அவர் பதிலளிக்கும்போது கூறியதாவது:—

"ஜப்பானைச் சுற்றிவளைத்துக்கொள்ளுதல் என்ற முயற்சி, முன்பே செய்யப்பட்டாலும் சரி, இனிமேல் செய்யப்போவதாயிருந்தாலும்சரி, ஜப்பானை இப்போது செல்லும் பாதையிலிருந்து விலக்கமுடியாது. ஜப்பானுடைய சுதந்தரத்தையும், கிழக்கு ஆசியாவின் சுதந்தரத்தையும், பாதுகாப்பையும் பாதிப்பதற்காக சில புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டால், ஜப்பான் சாவதானமாகப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது."

தன்னைப் பிறர் சுற்றிவளைத்துக்கொள்வதாக ஜப்பான் பாசாங்கு செய்கிறது. கிழக்கு ஆசியாவில், கூட்டு நல்வாழ்வு ஏற்படுத்தவேண்டும் என்ற சாக்கைச் சொல்லிக்கொண்டு, ஜப்பான் சீனாவைத் தாக்கியது. இப்போது "சுற்றிவளைத்துக்கொள்ளுதல்" என்ற சாக்கைச் சொல்லி இண்டோ-சீனாவை அதிக்கிரமித்திருக்கிறது. ஜப்பானுடைய நோக்கம் முன்னேறிச் சென்று தாய்லாந்தைக் கைப்பற்றவேண்டுமென்பதுதான் என்று அதன் சகல ஏற்பாடுகளும் கூறுகின்றன. இதைப்பற்றி, ஜப்பானின் அயல் நாட்டு மந்திரி விளக்கிக் கூறியதோடல்லாமல், செய்யும் காரியம் சரியென்றும் கூற ஆரம்பித்துவிட்டார். அவர் கூறுவதாவது:—"ஜப்பான் தெற்கு நோக்கிச் செல்வது உண்மையில் சமாதானத்தை லட்சியமாகக் கொண்ட முயற்சி என்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன்." ஜப்பானுடைய உண்மையான நோக்கங்களை மாறுபடுத்திக் கூறி அதன்மேல் அபாண்டமான குற்றங்களை மற்ற வல்லரசுகள் சாட்டுவதாக அட்மிரல் தோயாடா பாசாங்கு செய்கிறார்!

### ஜெர்மனியின் தூண்டுதல்.

ஒரு விஷயம் விளக்கமாகத் தெரிகிறது: பசிபிக் கடலில் போர் ஆரம்பிக்கும்படி ஜெர்மனி ஜப்பானைத் தூண்டுகிறது அப்படிப்பட்ட போர் ஜெர்மனிக்கு மிகவும் சௌகரியமாயிருக்கும். வடக்கில் ரஷ்யாவுக்கு விரோதமாகவாவது, தெற்கில் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் விரோதமாகவாவது, ஜப்பான் தன்னுடைய பேராசைகளை நிறைவேற்ற முயன்றால், அதற்கு அச்சுநாடுகள் உதவி செய்யும். ரஷ்யாவைப் பொறுத்தவரையில், ஜப்பான் இப்போது ஒன்றும் செய்யாது; காலம் போகப்போக சௌகரியம் எப்படியோ அதற்குத் தகுந்தபடி செய்யும். ஆனால் அதற்கு வேண்டிய சாக்குகள், சம்பவங்கள் முதலியன, எதேச்சாதிகார நாடுகளின் வழக்கத்தின்படி, இப்போதிருந்தே தயார் செய்யப்படுகின்றன. உதாரணமாக, வ்லாடிவாஸ்டோக், பெட்ட்ரோபாவ்லோஸ்க், இவைகளின் வெளியில் தற்பாதுகாப்புக்காக நீர் வெடிகுண்டுகள் மிதக்கவிடுவதை ஜப்பான் ஆட்சேபித்திருக்கிறது; அப்படிச் செய்தால், அந்தத் துறைமுகங்களின் வெளியில் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் உலாவிக்கொண்டிருக்கும் என்று பயமுறுத்தியிருக்கிறது. மஞ்சூகுவோவுக்கு வடக்கில் ஜப்பானியத் துருப்புகள் நடமாடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. யுத்தம் ஆரம்பித்த ஒன்பது மாதங்களாக இத்தாலி செய்துவந்த வேலையை இப்போது ஜப்பான் எடுத்துக்கொண்டிருக்கிறது. நேர்முகமாகத் தாக்காவிட்டாலும், தாக்குவதற்குத் தயாராயிருக்கும் நிலைமையை ஏற்படுத்தியிருப்பதால், ரஷ்யாவினுடைய பட்டாளங்களின் சிலபாகம் தூரக்கிழக்கரங்கப்பிரதேசத்துக்குத் திருப்பப்படும். இது ஜெர்மனிக்கு அனுகூலமாகும். ஆனால் ஜப்பானுக்கு ஒரு விஷயம் நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். ரஷ்யாவுக்கு எதிராக யுத்தம் தொடுத்தால், மரத்தால் கட்டப்பட்ட வீடுகள் நிறைந்த டோக்கியோவும் இதர ஜப்பானிய நகரங்களும் ரஷ்ய வெடி குண்டுகளாலும், அக்கினிக் குண்டுகளாலும் தாக்கப்பட்டு அடியோடு நாசமாக்கப்படும்.

ஜப்பான் இப்போது இண்டோ-சீனாவில் ஆகாய விமானத்தளங்களும், கடற் படைத்தளங்களும் பெற்றிருக்கிறது. இதற்கு ஜெர்மனிதான் காரணம். ஜப்பானுடன் வெட்கப்படும்படியான ஒரு உடன்படிக்கையைச் செய்யும்படி, விஷி அரசாங்கத்தை ஜெர்மனி கட்டாயப்படுத்தி, அதன்படி அந்தத் தளங்களை ஜப்பானுடைய உபயோகத்துக்குக் கொடுக்கும்படி செய்தது. இத்தளங்களில் ஜப்பான் தன்னுடைய யுத்தக் கப்பல்களையும், வெடி குண்டு விமானங்களையும் வைத்துக்கொண்டு, தனக்கிஷ்டம் வந்தபோது பர்மா, சிங்கப்பூர், டச்சுக் கிழக்கிந்திய தீவுகளைத் தாக்கலாம். அதற்காக இண்டோ-சீனாவில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு, தாய்லாந்திலும் அதே மாதிரியாகச் செய்ய ஜப்பான் முயற்சிக்கிறது.

### வந்தவரைக்கும் லாபம்.

ஆனால் ஜப்பான் தந்திரத்துடனும், ஜாக்கிரதையுடனும் வேலை செய்கிறது. பொருளாதார சௌகரியங்களைத்தவிர வேறொன்றும் தான் கேட்கவில்லை என்று கூறுகிறது. இண்டோ-சீனாவிலும், தாய்லாந்திலும், பொருளாதாரச் சௌகரியங்களைப் பெற்றதும், ஜப்பான் யுத்தப் போக்கைக் கூர்ந்து கவனித்து வரும். ரஷ்யா ஒருக்கால் தோல்வியடைந்தால், உடனே ஜப்பான் சைபீரியாவைத் தாக்கும், அல்லது மலேயாவையும், கிழக்கிந்திய தீவுகளையும் தாக்கும். ஆனால் ரஷ்யா வெற்றிபெற்று, ஜெர்மனி தோல்வியடைந்தால், ஜப்பான் வந்த வரைக்கும் லாபம் என்று இண்டோ-சீனாவில் பெற்றவற்றை வைத்துக்கொண்டு சும்மா இருக்கும்.

ஆனால் ஹிட்லருடைய நோக்கம் வேறு. ஜப்பான் வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, அதைப்பற்றி ஹிட்லருக்குக் கவலையேயில்லை. நேச நாடுகளுக்கு எவ்வளவு தொந்தரவு கொடுக்கமுடியுமோ, அவ்வளவு தொந்தரவும் கொடுக்கவேண்டுமென்பது தான் ஹிட்லரின் நோக்கம்.

ஜப்பான் இது வரையில் பயமுறுத்திக் காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கிறது. தாய்லாந்து, 1 கோடி 'பகிட்' (தாய்லாந்து நாணயம்) கடன் சௌகரியம் ஜப்பானுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது; ஜப்பானின் பொம்மை அரசாங்கமாகிய மஞ்சுகுவோவை சுதந்தர அரசாங்கமாகத் தாய்

லாந்து அங்கீகரித்திருக்கிறது. ஆனால் ரேடியோ மூலமாக தாய்லாந்து ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறது. எந்த தேசமாவது தன்னை அதிக்கிரமிக்க எண்ணி எதிர்த்தால், தன்னைப்பாதுகாத்துக்கொள்ள எந்தெந்த முறைகளுண்டோ அம்முறைகள் எல்லாம் கையாளப்படும் என்று தாய்லாந்து கூறியிருக்கிறது. உதாரணமாக, "கரிந்த பூமி முறை" அல்லது, தானியங்கள், பயிர்கள் முதலியவை எதிரிகள் கையில் அகப்படாமல் கொளுத்திக் கரியாக்கிவிடுதல், விஷப்புகை உபயோகப்படுத்தல், போக்கு வரத்து சாதனங்களை அழித்தல் முதலிய முறைகளெல்லாம் எதிரிக்கு விரோதமாகக் கையாளப்படும் என்று விளக்கிக் கூறியிருக்கிறது. தாய்லாந்து ரேடியோவில் பேசிய ஒருவர், தாய்லாந்து மக்கள் தங்களுடைய சுதந்தரத்தை இழப்பதற்குமுன் தங்களுடைய உயிரை இழப்பார்கள் என்று கூறினார்.

### குடியரசுகளின் ஒற்றுமை.

ஆனால் தாய்லாந்து மக்கள் பயப்படவேண்டியதில்லை. "ஏ பி.சி.டி. பிரண்ட்" என்ற குடியரசுகளின் ஒற்றுமை எதிர்ப்பு மிகப்பலமாயிருக்கிறது; அதாவது, அமெரிக்கா, பிரிட்டன், சீனா, டச்சுகிழக்கிந்தியத் தீவுகள், இவைகளெல்லாம் ஜப்பான் அதிக்கிரமத்தை எதிர்க்கத் தயாராயிருக்கின்றன. ஆஸ்திரேலியா, ஜப்பானுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆஸ்திரேலிய அயல் நாட்டு மந்திரி, சர் பிரடெரிக் ஸ்டுவர்ட், கூறியதன் சுருக்கமாவது:—

ஜப்பானை யாரும் சுற்றி வளைத்துக்கொள்ளவில்லை. ஆனால் அதனுடைய அதிக்கிரமத்துக்கு எதிராக, தங்களுடைய சுதந்தரத்தைக் காப்பாற்ற விரும்பும் நாடுகள் ஒன்று சேருவதை ஜப்பான் அஞ்சவேண்டும். அப்படி ஒன்று சேருவதின் பொறுப்பு ஜப்பானைச் சார்ந்ததாகும். ஏனென்றால், அமெரிக்கா, பிரிட்டன், இவைகளின் அயல் நாட்டு மந்திரிகள் முன்பே ஜப்பானுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். தாய்லாந்தில் பிரவேசித்தால், பர்மா, மலேயா, கிழக்கிந்திய தீவுகள் முதலியவற்றை அதிக்கிரமிக்க எண்ணியதாகக் கருதப்படுமென்றும், அதனால் அமெரிக்காவின் உரிமைகளுக்கும், பிரிட்டனின் உரிமைகளுக்கும் பாதகம் நேர்ந்ததாகக் கொள்ளப்படுமென்றும், ஜப்பானுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் முதல் மந்திரியான மிஸ்டர் மென்சிஸ் கூறியதாவது:—

"பசிபிக் கடலில் ஆஸ்திரேலியா சமாதானத்தை விரும்புகிறது. ஆனால் சிங்கப்பூர், ஆஸ்திரேலியாவின் எல்லையைச் சேர்ந்தது என்ற பூகோள உண்மையை நாங்கள் மறக்கமுடியாது."

கிழக்கிந்தியத் தீவுகளின் அரசாங்கம் எதற்கும் தயாராயிருக்கிறதென்று நெதர்லாந்து அயல்நாட்டு மந்திரி கூறியிருக்கிறார். பர்மா ரோட்டைக் காப்பாற்றுவதற்காக, யூனான் மாகாணத்தில் குங்மிங்கில் உள்ள சீன அரசாங்கம் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்திருக்கிறது. ஜப்பான தாய்லாந்தை எதிர்ப்பதை சீனா தடுக்குமானால், பிரெஞ்சுத் துருப்புகள் ஜப்பானுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் விஷி அரசாங்கம் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்திருக்கிறதென்பது புலப்படுகின்றது. பர்மாவனுடைய ஆகாய விமானச்சாலைகளில் அமெரிக்க ஆகாய விமானங்களும், பிரிட்டிஷ் விமானங்களும் எதிரிகளைத் தாக்குவதற்குத் தயாராயிருக்கின்றன. ஹாவேயில் அமெரிக்க யுத்தக்கப்பல்களும், பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்கப்பட்டாளங்களும், ஜப்பானின் அதிக்கிரமத்தை அடக்குவதற்குத் தயாராயிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில், பிரிஸ்பேனில், அமெரிக்க யுத்தக்கப்பல்கள் வந்து சேர்ந்திருக்கின்றன.

சிங்கப்பூரில் உள்ள பிரிட்டிஷ் ராணுவத்தலைமை அதிகாரிகள் தயாராயிருக்கிறார்கள். சிங்கப்பூருக்கருகில், அநேக பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆகாய விமானப்படைகள், சர் ராபர்ட் புரூக்-பாப்பம் என்ற விமானப் பிரதம தளகர்த்தரின் தலைமையின்கீழ் யுத்தசன்னத்தமாக இருக்கின்றன. பிரிட்டிஷ் பட்டாளங்கள் சிங்கப்பூருக்கு இன்னும் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் துருப்புகளில் பெரும்பாலும் மலேயாவிலும், பர்மாவிலும் அதிக காலம் தங்கி, காட்டுப் புதர்ச்சண்டையில் பயிற்சிபெற்று, காலநிலையைச் சமாளிக்கும் அனுபவம் பெற்றிருக்கின்றன. ஜப்பானியத்துருப்புகள் இண்டோ-சீனாவில் சமீபத்தில் பிரவேசித்த பிறகு இந்த அனுபவம்பெற ஆரம்பித்திருக்கின்றன. பர்மா, மலயா, கிழக்கிந்தியத் தீவுகள், தாய்லாந்து, தெற்கு இண்டோ-சீனா இவைகள் அடர்த்தியான காடுகள் நிறைந்த நாடுகள். ஆகையால் பிரிட்டிஷ் துருப்புகளின் அனுபவம் ஒரு சிறந்த அனுகூலம்.

தூரக்கிழக்கரங்கத்தில், குடியரசுநாடுகள் சமாதானத்தில் தங்கள் நம்பிக்கையைவைத்து, யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன.

# மாட்சிமைதங்கிய - - - - - - - - - சக்கரவர்த்தினியின் பிரசங்கம்.

## அமெரிக்கநாட்டு மக்களுக்கு நன்றியறிவித்தல்.

### பிரிட்டிஷ் பெண்மணிகளின் தைரியமும், தொண்டும்.

### "அன்பும் சந்தோஷமும் நிறைந்த உலகத்தை நிர்மாணிப்போம்."

அமெரிக்க நாட்டு மக்களுக்கு மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் சக்கரவர்த்தினி, எலிசபெத் ராணி, சென்ற ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட்டு 10உ) ஒரு பிரத்தியேக பிரசங்கம் செய்தார். அதில் அமெரிக்கர்கள் செய்து வரும் தியாகத்துக்குக்காகத் தம்முடைய நாட்டு மக்களின் நன்றியறிதலைத் தெரிவித்தார். மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினி கூறியதாவது:—

"இரண்டு வருஷங்களுக்குமுன், அமெரிக்க நாட்டு மக்களிடம் ரேடியோ மூலம் நான் பேசினேன். அப்பொழுது அவர்களுடைய அன்பிற்காக எங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்தேன். அதே நண்பர்களிடம் இப்போது பேச விரும்புகிறேன். ஆனால், இப்போது அவர்களுடைய அதிகமான அன்பிற்கு எங்களுடைய நன்றியறிதலை மீண்டும் கூற விரும்புகிறேன்.

"உங்களைப்போலவே நாங்களும் சமாதானத்தை விரும்புகிறோம். யுத்தத்தை வருஷங்களாக பிறரைக் கொல்வதற்காகவும், அழிப்பதற்காகவும் நாங்கள் திட்டம் போடவில்லை. இப்போதுகூட, எதிரிகளுடைய தைரியத்துக்குச் சமமாக நமது மக்கள் இருக்கிறார்களே ஒழிய, அழிக்கும் வேலையில் சமத்துவம் அடையவில்லை.

"தற்சமயம்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் பலம், அன்பு, பொருள், முதலியவற்றை முழு அளவுக்கு உபயோகப்படுத்துவதற்கு ஆரம்பித்திருக்கிறோம். இது கடைசியில், கடவுளினுடைய அனுக்கிரகத்தினால், நற்பயனளிக்குமென்பது திண்ணம்.

"நமது நாட்டு மக்கள், பல மாதங்களாக, பொறுமையோடு ஒரு பளுவான பாரத்தைத் தாங்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்களோடு கலந்து பேசும்போது, அசைக்க முடியாத அவர்களுடைய மனவுறுதி எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. பல நகரங்களில், அவர்களுடைய வீடு வாசல்களும், பண்டைக்காலக் கட்டடங்களும் நாசமாக்கப்பட்டுப் பாழாய்க்கிடக்கின்றன. அவர்களுடைய பெண்களும், குழந்தைகளும், கொல்லப்பட்டார்கள். ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெறும் வியாதியஸ்தர்களும் இதிலிருந்து தப்பவில்லை. ஆனால் இந்தக் கஷ்டங்களெல்லாம் எங்களுடைய இருதயத்தைக் கடினமாக்கி, மனவுறுதியைப் பலப்படுத்தியிருக்கின்றன. நான் எங்கு சென்றாலும், பிரகாசிக்கும் கண்களையும், புன்னகை பூத்த முகங்களையும் காண்கிறேன். நாங்கள் செல்லும்படியான பாதை கடுமையானதும்,

கரடுமுரடானதுமான பாதை; ஆனால் அது நேர் முகமான பாதை. ஒரு பெரிய கொள்கைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் அறிவோம்.

## மறக்கமுடியாத உதவி.

"கஷ்டகாலத்தில் மற்றவர்களுடைய உதவியை நாடுவது எங்களுடைய வழக்கமல்ல; ஆனால் நாடுவதற்குமுன் உங்களுடைய உதவி எங்களுக்கு அதி விரைவில் கிடைக்கும் என்பதை நாங்கள் அறிவோம். உங்களுடைய தாராளமான மனப்பான்மையும், மனப்பூர்வமான ஆதரவும், இந்தத் தீவுகளில் வசித்துப் போர்புரிந்துகொண்டிருக்கும் எங்களுடைய இருதயத்தை அளவில்லாமல் அசைத்துவிட்டன. எங்களுடைய கஷ்டகாலத்தில், நீங்கள் செய்த உதவியை நாங்கள் என்றென்றும் மறக்கமுடியாது; மறக்க மாட்டோம்.

"உடையில்லாதவர்களுக்கு உடையும், உணவில்லாதவர்களுக்கு உணவும், துன்பப்பட்டவர்களுக்குச் சௌகரியங்களும் நீங்கள் கொடுத்து உதவினீர்கள். சிற்றுண்டி வண்டிகள், முதல் வைத்திய உதவி வண்டிகள், மருந்து சாமான் 'சப்ளை'கள், இவைகளெல்லாம் தங்குதடையில்லாமல் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்துகொண்டேயிருக்கின்றன. சரியான அளவு சில வார்த்தைகள் மூலமாக எங்களுடைய நன்றியறிதலைத் தெரிவிக்க என்னால் முடியவில்லை. அது மிகவும் ஆழமானதும் உண்மையானதுமான நன்றியறிதல் என்று மாத்திரம் கூற விரும்புகிறேன்.

"நீங்கள் அனுப்பும் நன்கொடைகளும், சாமான்களும் எப்படி உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதை நீங்கள் நேரில் பார்க்கமுடியாது; நான் பார்த்திருக்கிறேன்; சுதந்தரத்துக்காக கஷ்டப்பட்டுப் போராடிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஆண்மக்களுக்கும், பெண் மக்களுக்கும், அவைகள் பெருத்த ஆதரவையும் மனசாந்தியையும் அளித்திருக்கின்றன; எவ்வளவு பெரிய அளவுக்கு அளித்திருக்கின்றன என்பதை நீங்களே நேரில் பார்த்தால்தான் தெரியும்.

"பிரிட்டனில் பெண் மக்கள் தொழிற்சாலைகளிலும், வயற்காடுகளிலும், வேலைசெய்து வருகின்றார்கள். ஏனென்றால், வெடிகுண்டு மருந்துகளோடு உணவுப்பொருள்களும் வேண்டியிருக்கின்றன. பெண் மக்களின் தைரியம் மிக மெச்சத்தகுந்ததாயிருக்கிறது; அவர்களுடைய சகிப்புத் தன்மை ஆச்சரியப்படும்படியானதாயிருக்கிறது. பல வேலைகளில் அவர்கள் தொண்டாற்றுவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். கடற்படையிலும், தரைப்படையிலும், ஆகாய விமானப்படையிலும், பளுவான 'மோட்டார் லாரி' வண்டிகள் ஓட்டுவதிலும், சமையல் செய்வதிலும், ரகசியத் தந்திகளை மொழி பெயர்ப்பதிலும், 'டைப்' அடிப்பதிலும், ஆயிரக்கணக்கான பெண் மக்கள், கஷ்டமான நிலைமையில், சந்தோஷத்துடனும், தைரியத்துடனும் வேலைசெய்து வருகிறார்கள்.

"அநேகப் பெண்மணிகள் ஏர் உழுது விவசாய வேலை செய்கிறார்கள்; பலர் விமான எதிர்ப்பு 'வார்டன்'களாகவும், முதல் உதவி சிகிச்சை மோட்டார் வண்டி 'டிரைவர்'களாகவும், தொண்டு செய்கிறார்கள். ஆயிரக்கணக்கான பெண் மக்கள் சாந்தமாகவும், சாவதானமாகவும், இராக்காலங்களில் வெடிகுண்டுக் கொடுமைகளைச் சகித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பராமரிப்பில் இருப்பவர்கள் அவர்களைக் கண்டு தைரியமும் பலமும் பெறுகிறார்கள்.

## செவிலித்தாய்களின் சேவை.

"முக்கியமாக, செவிலித்தாய்மார்களைப்பற்றி ('நர்சு'கள்) ஒரு தனி வார்த்தை கூற விரும்புகிறேன். அவர்கள் அருமையான பெண்மணிகள். அவர்களுடைய தைரியமும், கடமையைச்செய்யும் ஆற்றலும், எந்தக்காலத்திலும் மறக்கமுடியாதவை. வெடிகுண்டுகளால் நாசமாக்கப்பட்ட ஆஸ்பத்திரியிலும், தம் கடமையைச்செய்ய அவர்கள் தவறுவதில்லை. தாங்கள் காயம்பட்டபோதிலும், தங்கள் சிகிச்சையிலிருப்பவர்களைப்பற்றித்தான் அவர்கள் சதா சிந்திப்பார்களே ஒழிய தங்களைப்பற்றிச்சிந்திப்பதில்லை.

"இல்வாழ்க்கையை நடத்தும் உங்களுக்கு, வீடுகளில் பெண்மக்கள் எவ்வளவு கஷ்டத்துடன் இங்கு வாழ்க்கையை நடத்துகிறார்களென்பதைப்பற்றி நான் கூறவேண்டியதில்லை. இன்னும் பிரிட்டிஷ் பெண்மக்கள் இதர துறைகளில் காட்டும் தைரியத்தைப் பற்றி முடிவில்லாமல் நான் பேசிக்கொண்டேபோகலாம். ஏனென்றால் எல்லாத்துறைகளிலும் அவர்கள் மகத்தான சேவை செய்துகொண்டு வருகிறார்கள் ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் உங்களுக்குச்சொல்ல விரும்புகிறேன். பகலிலாவது, இரவிலாவது அவர்கள் எந்த வேலை செய்தாலும், நீங்கள் அவர்களைப்பற்றி நினைப்பது அவர்களுக்கு உற்சாகத்தையும் குதூகலத்தையும் அளிக்கிறது.

"பிரிட்டனில் உள்ள எல்லோர்களுடைய சார்பாக, அமெரிக்க மக்களாகிய உங்களுக்கு என் நன்றியறிதலைத்தெரிவித்தாலும், அமெரிக்கப் பெண்மணிகளுக்கு என்னுடைய பிரத்தியேகமான நன்றியறிதலைத்தெரிவிக்க விரும்புகிறேன். எங்களை நீங்கள் மறந்துவிடவில்லை என்பதை நினைக்க எங்களுக்கு ஒரு புதிய பலம் உண்டாகிறது. இந்தக் கஷ்டகாலத்தில் எங்களுக்கு ஆதரவளித்தீர்கள். யுத்தத்தால் நேர்ந்த துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கும் லட்சக்கணக்கான மக்கள் சார்பாக நான் கூறுகிறேன். நாங்கள் உங்களுடைய உதவிக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறோம். உங்களுடைய தியாகத்தை நாங்கள் என்றும் மறவோம்.

## பொதுக் கொள்கைகள்.

"உங்களுடைய அன்பும் ஆதரவும், நம்முடைய பொது பாஷையினால் மட்டுமல்ல, பொதுப் பழக்க வழக்கங்களையினால் மட்டுமல்ல, பொதுக் கொள்கைகளால் தூண்டப்பட்டவையாகும். கொடுங்கோன்மையை நாங்கள் வெறுப்பதுபோல் நீங்களும் வெறுக்கிறீர்கள். எந்தக் கொள்கைகளுக்காக நாங்கள் உயிரையும் தியாகம்செய்து போராடுகிறோமோ, அவைகளுக்காக நீங்களும் அப்படியே செய்யத் தயாராயிருக்கிறீர்கள். அதனால்தான் உங்களுடைய தாராளமான உதவியை எங்களுக்கு அளிக்கிறீர்கள்.

"எவ்வளவு தியாகம் செய்யவேண்டுமானாலும் சரி, எவ்வளவுகாலம் இந்த யுத்தம் தொடர்ந்து நடந்தாலும் சரி, நியாயம், சுதந்தரம், மனிதத் தன்மையின் பெருமை, அன்பு, இவைகள் உலகத்தில் அழிந்து போகவிடக்கூடாது. இந்த மனவுறுதியுடன் நாங்கள் போராடுகிறோம். அதே மனவுறுதி உங்களுக்கும் இருக்கிறதென்பதை நாங்கள் அறிவோம்.

"நான் ஒரு நன்னாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அந்நாளில், நம்முடைய சந்ததியாருக்கு, அன்பும் சந்தோஷமும் நிறைந்த உலகத்தை நிர்மாணிப்பதற்காக நாமிருவரும் ஒன்றுசேர்ந்து, ஒத்துழைத்து, முன்செல்வோம். கடவுள் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக!"

---

# மலேயாவில் காட்டுச் சண்டை:

## இந்தியச் சிப்பாய்களின் பயிற்சி.

### மாயமாய் மறைந்த படை!

(ஒரு நிருபரிடமிருந்து)

அடர்த்தியான காடு. காட்டோரத்தில் சிறு வெளிச்சமான இடம். அங்கு, சில சிப்பாய்கள் உட்கார்ந்திருந்தார்கள்; சிகரெட்டு குடித்துக்கொண்டு, தாழ்ந்த குரலில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அணிந்தது போர்க்கோல உடை; ஆனால் ஒரு வித்தியாசம் இருந்தது. தலைக்கு 'ஸ்டீல்' தொப்பிகளுக்குப் பதிலாக, 'பக்ரீ' என்ற தலைப்பாகை அணிந்திருந்தார்கள். பெண்கள் தங்களுடைய தலைமயிர் கலையாமலிருப்பதற்கு அணியும் வலையைப்போல், தலைப்பாகைக்குமேல் ஒரு வலையை அணிந்திருந்தார்கள். பச்சை இலைகள், மரத்தின் சிறு கிளைகள், முதலியவை வலையில் சொருகப்பட்டிருந்தன. மேலே ஆகாய விமானத்திலிருந்து பார்த்தால் மரங்களோடு மரங்களாகச் சிப்பாய்கள் காணப்படுவார்கள். சிப்பாய்கள் தங்களைத் தொந்தரவு செய்யும் கொசுக்களை, கைகளினால்

அடித்துக்கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே புழுக்கமாக இருந்தது. கைகுட்டைகளினால் நெற்றியைத் துடைத்துக்கொண்டார்கள். காற்றென்பது கொஞ்சங்கூட இல்லை.

பட்டாளத்தின் தளகர்த்தர், செய்யப்போகும் பயிற்சியைப்பற்றி, சில வார்த்தைகள் கூறினார். படையின் ஒருபாகம் எதிரியைப்போல் வந்து அவர்களைத்தாக்க முயற்சிக்கும்; அதைத்தடுத்து அவர்கள் போர்புரியவேண்டும். "எதிரிகள்" சமீபத்தில் இருப்பதாக மாத்திரம் தெரியும்; அவர்களுடைய மொத்த எண்ணிக்கை, ஆயுத முஸ்தீப்பு விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. எங்களுடைய படையின் வேலை காட்டுக்குள் ஊடுருவிச்சென்று அதற்கப்பாலுள்ள ரோட்டுக்குப் போய்ச்சேரவேண்டும். இந்த வேலையை 50 நிமிஷத்துக்குள் முடித்துவிடவேண்டும். அந்த ரோட்டை பெருவாரியான "எதிரி"த் துருப்புகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும். தளகர்த்தர் பூகோளப்பட விவரங்கள் சிலவற்றையும் எங்களுக்குத் தெரிவித்தார். பட்டாளத்தின் சுபேதார் சிறு பகுதி தளகர்த்தர்களை அழைத்து, அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி மிக நுட்பமான விவரங்களை அறிவித்தார். அவர்களிடமிருந்த கடிகாரங்களின் காலம் சரிப்படுத்தப்பட்டது.

படை சந்தடியில்லாமல் காட்டுக்குள் சென்றது. திசையறிகருவி வைத்திருந்தவன் எந்தத் திக்கில் செல்லவேண்டும் என்று வழிகாட்டினான். கொக்கிவளையம் வைத்திருந்தவர்கள் புதர்ச்செடிகளை வெட்டி வழிசெய்து கொண்டுபோனார்கள். மற்றவர்கள் ஒருவர் பின்னொருவராக வழியைப் பின்பற்றிச் சென்றார்கள். படையின் உத்தியோகஸ்தர்கள் சிப்பாய்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சீக்கிரம் படையினர் காட்டில் மறைந்தார்கள்.

### புதர்களிலிருந்த தலைப்பாகை,

படை உத்தியோகஸ்தர்கள், ஏற்படுத்திய திட்டத்தைப்பற்றி சில நேரம் கலந்து யோசித்தார்கள். பிறகு, சிப்பாய்கள் சேரவேண்டிய இடத்துக்கு மோட்டார் வண்டியில் சென்றார்கள். அந்த இடத்தை அடைந்ததும், சிப்பாய்களின் தலைப்பாகை, ஒன்றன் பின்னொன்றாக, ரோட்டு ஓரத்திலிருந்த புதர்களிலிருந்து வெளியே தெரிந்தன; படை சிப்பாய்கள் காட்டைத்தாண்டியது மாத்திரமல்லாமல், தாங்கள் இருக்கவேண்டிய இடத்தில், சுபேதார் அவசரமாக வேவுபார்த்தவுடன், அமர்ந்தார்கள். அந்தக் காட்டைக்கடந்து செல்வதற்கு சரியாக 18 நிமிஷம் ஆயிற்று.

மலேயாவில் இருக்கும் இந்திய தரைப்படைகளில் இப்படிப்பட்ட பயிற்சிகள் மிகவும் சாதாரணமானவை. மலேயாவின் காடுகள் இதுவரைக்கும் உள்ளே நுழைய முடியாதவையாய்க் கருதப்பட்டன. இக்காடுகளுக்குள் நுழையலாம் என்று கண்டு பிடித்தது பெரும்பாலும் இந்தியப் படைகளே—சகலவித பண்டக சாமான்களும், யுத்த முஸ்தீப்பு சாமான்களும் உடைய பெருந்துருப்புகளாலல்ல, அதிக சாமான் உதவியில்லாத சிறு துருப்புகளால் தான் காடுகளுக்குள் பிரவேசிக்கமுடிந்தது. நெருங்கி அடர்த்தியாக இருக்கும் காடுகளை அலட்சியம் செய்துவிட்டு, சமவெளிகளையும், நெல்விளையும் வயல்களையும், கடற்கரையோரங்களையும், ரோட்டுகளையும் மாத்திரம் அதற்குப் பின் கவனிப்பது முடியாத காரியமாய் விட்டது.

மலேயாவின் காடுகள் மூன்றடுக்கு மெத்தையைப் போல் அமைந்திருந்தன. முதலடுக்கு, 300 அடி உயரம் வளர்ந்து மேலே புகர்போல் வளர்ந்திருக்கும் நீண்ட மரங்கள்; இரண்டாவது அடுக்கு, இந்த பிரம்மாண்டமான மரங்களின் நிழலில் வளரும் சிறு மரங்கள்; மூன்றாவது அடுக்கு, எங்கு பார்த்தாலும் பரவி அடர்த்தியாக வளர்ந்திருக்கும் புதர்கள். இப்புதர்களை வெட்டி அப்புறப்படுத்திவிட்டால், மரங்களுக்கிடையில் மனிதர்களும், மிருகங்களும் செல்வதற்கு தாராளமான வழி ஏற்படும். நவீன யுத்த ஏற்பாடுகளில், மிருகங்களுக்கு அதிக வேலைகிடையாதென்றாலும், மலேயாவில், இந்தியப் பட்டாளங்களில் கொஞ்சங் கொஞ்சமாக மோட்டார் வண்டிகளின் உபயோகத்தால் விலக்கப்பட்டுவரும் கோவேறு கழுதைகள் மறுபடியும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

### பிரம்மாண்டமான முயற்சி.

யுத்தப் பயிற்சிகளில் ஒன்றில், ஒரு ஹைதராபாத்து படை 'எதிரி'யாக வந்து போர் புரிந்தது. ஒரு ஸ்காட்டிஷ் மேல்நாட்டுப் படைக்கு அதனுடன் போர் புரிந்து அழிக்கும்படியான வேலை கொடுக்கப்பட்டது. ஹைதராபாத்து சிப்பாய்கள் காட்டுக்குள் பிரவேசித்து சகலவித கஷ்டங்களையும் அனுபவித்து, கடைசியில் ஓரிடத்தில் முகாம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அதிகாலையில் எழுந்து எதிரிகளைத் தாக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆர்கைல்ஸ் என்ற மிகப்பிரபல படையினர் மாந்தோப்பு சதுப்பு நிலங்களின் வழியாகவும், அடர்த்தியான காட்டின் வழியாகவும், சென்று முழங்காலாழம் சேறு நிறைந்த மலை ஆறுகளைக்கடந்து 'எதிரி'கள் இருப்பதாகக் கூறப்பட்ட இடத்தை அடைந்தார்கள். வேவு பார்க்கும் அவர்களுடைய சிப்பாய்கள், ஹைதராபாத் சிப்பாய்கள் முகாம் போட்டிருக்கும இடத்தைக் கண்டு பிடித்து முன்பே சொல்லிவிட்டார்கள். ஆனால் ஆர்கைல்ஸ் சிப்பாய்கள் அங்கு வந்ததும், ஹைதராபாத் சிப்பாய் ஒருவனைக்கூடக் காணவில்லை. ஹைதராபாத் படை மாயமாய் மறைந்தது. ஏனென்றால், விடியற்காலம் இரண்டு மணிக்கு, அப்படையின் தளகர்த்தர் தூரத்தில் 'எதிரி' கள் வந்திருப்பதை ஏதோ மன உணர்ச்சியால் அறிந்தார். உடனே அவசரமாக முகாமைக்கலைத்துவிட்டு, ஹைதராபாத் படை வேறிடம் சென்றது. அரை மணி நேரம் கழித்து ஆர்கைல்ஸ் படை வந்து சேர்ந்தது. மலேயாவின் காடுகளில், புலிகளும், ஆர்கைல்ஸ் சிப்பாய்களும், மாத்திரம் பார்த்த பிரதேசங்கள் பல உண்டு என்று ஒரு பழமொழி வழங்குகிறது. அப்படிப்பட்ட படை வெகு தூரம் சென்று வளைந்து, திரும்பி ஹைதராபாத் முகாமுக்கு வந்தது ஒரு பிரமாண்டமானதும் மெச்சத் தகுந்ததுமான முயற்சி என்று ஹைதராபாத் சிப்பாய்கள பின்பு கூறினார்கள்.

மலேயாவின் காடுகளில் யுத்தப்பயிற்சி செய்யும் இந்தியத் தளகர்த்தர்களைப்பற்றியும், இந்தியச் சிப்பாய்களைப்பற்றியும் அநேக கதைகள் சொல்லப்படுகின்றன. அவைகள் பெரும்பாலும் புலி, சிங்கங்களைப்பற்றியல்ல; சிறு ஜந்துக்களான அட்டை, கொசு, எறும்பு, பாம்பு முதலியவைகளைப்பற்றித்தான். அவைகளின் தொந்தரவுகளினால் படும் கஷ்டங்களைச் சமாளித்து, இந்தியச் சிப்பாய்கள் தம்முடைய கடமையைச் செய்துவருகிறார்கள்.

# வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும், ஆகாய விமானப் போர்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியிலுள்ள கைத்தொழிற் பட்டணங்களாகிய, எஸ்ஸன், டார்மண்டு, ஹாம் ஆகிய இவற்றிலுள்ள கைத்தொழிற்சாலைகள்மீது பெருவாரியாக குண்டுகளைப் போட்டுத் தாக்கிற்று என்றும், நான்கு ஆகாய விமானங்கள் இழக்கப்பட்டனவென்றும் ஒரு அறிக்கை கூறுகிறது. எஸ்ஸனிலுள்ள க்ருப்ஸ் யுத்த தளவாட தொழிற்சாலை இதுவரையில் இருபது தடவைகள் தாக்கப்பட்டதென்று ஆகாய மந்திரி பார்லிமெண்ட் சபையில் தெரிவித்தார். சென்ற சனிக்கிழமை இரவு பெர்லின் நகரத்தை தாக்கியதில் 25 ஜெர்மானியர்கள் இறந்தனர் என்று ஸ்வீடன் பத்திரிகையாகிய 'டெமாக்ரடென்ஸ்' பத்திரிகையின் பெர்லின் நிருபர் எழுதுகிறார். விளக்கு வெளிச்சம் வெளியே தெரியக்கூடாதென்று பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டிருக்கின்றனர். சென்ற வாரத்தில் வடக்கு ஜெர்மனியும், வடமேற்கு ஜெர்மனியும் தாக்கப்பட்டதென்று ஜெர்மன் ரேடியோ கூறுகிறது. கில் பட்டணம் பலமாகத் தாக்கப்பட்டது. ஹாம்பர்க் பட்டணமும் தாக்கப்பட்டது. பிராங்க்போர்ட், மான்ஹீம், கார்ல்ஸ்ரூ பட்டணங்கள் மீண்டும் தாக்கப்பட்டன.

வட பிரான்ஸில் சேர்போர்க்கு அருகிலும், செயின்ட் ஓமருக்கு அருகிலும் உள்ள ஆகாய தளங்கள், கிரேவ்லைன்ஸுக்கு அருகில் கடற்கரை பிரதேசங்கள். ஆகியவற்றின்மீது குண்டுகள் போடப்பட்டன. இதில் 11 எதிரி விமானங்கள் நாசமாயின. நம்முடைய விமானங்களில் 5 காணப்படவில்லை.

## சூடான் யுத்த முனை.



சூடான் பாதுகாப்பு சேனை சமீபத்தில் மிகவும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இச்சேனை இதாலியர்களுடன் மிகவும் வன்மையாய் போரிட்டது. இச்சேனையின் ஒரு பாகத்தைப் படத்தில் காணலாம்.

நார்வே பட்டணமாகிய பெர்கனுக்கு வடக்கில் நார்வேக்கடலில் மறைந்திருந்த இரண்டு ஜெர்மன் சப்ளை கப்பல்கள்மீது குண்டுகள் போட்டதில் ஒரு கப்பல் தீப்பிடித்து எறிந்தது.

டச்சு கடற்கரைக்கு அருகில் போய்க்கொண்டிருந்த விரோதி கான்வாய்கப்பல்மீது குண்டுகள் போடப் பட்டன.

டென்மார்க்கிலுள்ள ஆகாய தளங்களும் மற்ற லட்சியங்களும் குண்டுகளபோட்டுத் தாக்கப்பட்டன. இந்த இரவுத்தாக்குதல்களில் நான்கு பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் இழக்கப்பட்டன என்று பிரிட்டிஷ் ஆகாய மந்திரி அறிக்கை கூறுகிறது.

சென்ற வாரத்தில் அச்சுதேசங்கள் 57 விமானங் களையும், பிரிட்டன் 52 விமானங்களையும், மேற்கு ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கரங்கத்திலும் செய்த சண்டைகளில் இழந்தன. இங்கிலீஷ் கால்வாயின் மேல், பகலில் நடந்த ஆகாயச்சண்டையில் 24 பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பி வரவில்லை ; 35 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. மத்திய கிழக்கரங்கத்தில் பிரிட்டன் ஒரு விமானத்தை இழந்தது ; அச்சு நாடுகள் 16 ஆகாய விமானங்களை இழந்தன.

இங்கிலந்தின் கிழக்குக் கடற்கரையோரங்களிலும், ஸ்காட்லண்டிலும், சில விரோதி விமானங்கள் வெடி குண்டுகளைப்போட்டன. உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் இல்லை.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக் கடலும்.

வட ஆப்பிரிக்காவில், லிபியாவில் விரோதி அதிக்கிரமத்திலுள்ள துறைமுகங்கள், மறுபடியும் குண்டுகள் போட்டுத் தாக்கப்பட்டன. மத்திய கிழக்கரங்கத்திலுள்ள பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—

லிபியா :—விரோதி அதிக்கிரமத்திலுள்ள துறைமுகங்கள் பலமாக இரவில் தாக்கப்பட்டன. பெங்காசி மீண்டும் தாக்கப்பட்டது ; டிரிபோலி பலமாகத் தாக்கப்பட்டது ; எல்லா வெடிகுண்டுகளும் கப்பல் பழுதுபார்க்கும் இடங்களின்மேலேயே விழுந்தன. காபூசோ, காம்பேட், பார்டியா பட்டணங்கள் மறுபடியும் தாக்கப்பட்டன. விரோதித் துருப்புகளை ஏற்றிச் செல்லும் பல மோட்டார் லாரிகள் சேதமடைந்தன. சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

ஈஜிப்ட் :—பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, விரோதிகளின் மெஸ்ஸர்ஸ் சிமிட்—110, விமானங்கள் பலவற்றைத் தாக்கிச் சேதப்படுத்தின. அலெக்ஸாண்டிரியாவின்மேல் போட்ட சண்டையில், விரோதி ஜங்கர்ஸ்—88, விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அபிசீனியா :—கோண்டார் பிரதேசத்தில் ஒருங்கு சேர்ந்திருக்கும் இத்தாலிய துருப்புகள்மீது தென் ஆப்பிரிக்க ஆகாய விமானப்படை குண்டுகளைப் போட்டுத் தாக்கிவிட்டு பத்திரமாகத் திரும்பிவந்தன.

டொப்ரூக் :—ஒரு சிறிய இத்தாலிய வேவுபார்க்கும் படை, டொப்ரூக்கில் கைதியாக்கப்பட்டது. சென்ற சனிக்கிழமை இரவு இத்தாலிய துருப்புகள் 300 கஜ தூரத்திற்குள் வந்ததும் பீரங்கி வெடி குண்டுகளினால் பலமாகத்தாக்கப்பட்டு ஒருவர்கூட பாக்கி இல்லாமல் கொல்லப் பட்டனர். சென்ற ஞாயிற்றுக்கிழமை நம்முடைய வேவு பார்க்கும் படை விரோதி யுத்த முஸ்தீப்புள்ள வண்டிகளைப்பார்த்து உளவு கொடுத்ததும், அவைகளைப் பின்வாங்கிச் செல்லும்படி நம்முடைய பீரங்கிகள் தாக்கின.

சிரிநெய்கா :—பிரிட்டிஷ் பிளென்ஹெய்ம் விமானம், பார்டியாவிலுள்ள விரோதி துப்பாக்கிகள் ரிப்பேர் செய்யும் கடைகளின்மீது குண்டுகள் போட்டு பெருத்த சேதம் விளைவித்தது.

டிரிபோலிடானு :—மீசூராட்டாவிற்குத் தெற்கே விரோதி துருப்புகள் எற்றிச் செல்லும் மோட்டார்களும் வேவு பார்க்க உதவும் வண்டிகளும் பீரங்கி குண்டுகளால் துளைக்கப்பட்டுச் சேதமடைந்தன. ப்யூராட்டிலுள்ள இரண்டு பெரிய யுத்த வெடிமருந்து களஞ்சியங்கள் பலமாகத் தாக்கியதில் தீப் பிடித்து வெடித்து பெருத்த சேதம் விளைவித்தது. பக்கத்திலுள்ள விரோதி துருப்புகளில் பலர் இறந்தனர்.

சிசிலி :—சிரக்யூஸிலுள்ள ஒரு பெரிய வியாபாரக் கப்பல், ஆகாய விமானப் படையால் தாக்கப்பட்டது. அகஸ்டாவின் மீது அநேக குண்டுகள் போட்டதில் ஒரு குண்டு நிலக்கரி வாயு சேகரித்து வைத்திருக்கும் ஒரு பெரிய டாங்கியின் மீது குறி தவராமல் பட்டது. பிறகு நம்முடைய விமானங்கள் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்ந்தன.

மால்டா.—மால்டாவின் மீது நடந்த ஆகாயச் சண்டையில் விரோதி விமானங்களில் மூன்று சுட்டு வீழ்த்தியது, கடற்கரையிலுள்ள ஜனங்களுக்கு நன்ருகத் தெரிந்தது. இவற்றுள் இரண்டு விமானங்கள் ஒரே ஆகாய விமான ஓட்டியால் சுட்டு கடலுக்குள் வீழ்த்தப்பட்டது.

சூயஸ் :—சூயஸ் கால்வாய் பிரதேசத்தில் இரவில் நடந்த ஆகாயச் சண்டையில் 18 பேர் காயமடைந்தனர் ; அவர்களுள் 11 பேர் இறந்தனர் ; சொற்ப பொருட் சேதமும் உண்டாயிற்று.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

மிஸ்டர் சர்ச்சிலும், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் சென்ற வாரத்திற்கு முன்பு சந்தித்தார்கள். அதன் பயனுக, வியாழக்கிழமை இரவு யுத்த நோக்கங்களைப் பற்றி ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அதன் விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

அமெரிக்க துருப்புகள் ஐஸ்லாந்தில் பெருவாரியாக வந்து இறங்கி இருக்கின்றன.

விஷியுடன் செய்துகொண்ட இண்டோ-சீன ஒப்பந்தத்தை ஜப்பான் மீறுவது அமெரிக்கா சும்மா பார்த்துக்கொண்டிருக்காது என்று ஜப்பானிலுள்ள அமெரிக்க ஸ்தானிகராகிய மிஸ்டர் ஜோஸப் க்ரூ, ஜப்பானிய வெளிநாட்டு மந்திரியாகிய அட்மிரல் டோயாடாவிடம், விளக்கமாகத் தெரிவித்திருக்கின்றார்.

ஆருவது கானடா டிவிஷன் படை இப்போது திரட்டப்பட்டு வருகிறதென்றும், கானடா பஸிபிக் கடலோரப் பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் கானடா பாதுகாப்பு மந்திரியாகிய கர்னல் ராஸ்ஸ்டன் தெரிவித்தார்.

மேற்குக் கோளத்தை ஜெயிக்க அதிக ஆவலுடன் ஜெர்மனி பார்த்து கொண்டிருக்கிறதென்றும், பஸிபிக் மகா சமுத்திரத்தை வளைப்பதில் ஜப்பான் தான் பொறுப்பாளியென்றும், ரூஸ்வெல்டிற்கு விரோதமாக லத்தீன் அமெரிக்காவில் ஜெர்மனி செய்யும் பிரசாரமும், அமெரிக்கா, பிரிட்டன், சீனா, டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் ஜப்பானை வளைத்துக் கொண்டிருக்கிறதென்று ஜப்பான் கூறுவதும், சுத்த பொய்ப் பிரசாரமென்றும், அது ஐரோப்பாவில் பதினைந்து தேசங்களை ஒழுக்கமற்ற முறையில் கைப்பற்றிய கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சர்க்கார் பிரசாரமாக இருக்கிறதென்றும், அமெரிக்க அரசியல் மந்திரியாகிய மிஸ்டர் கார்டல் ஹல் தெரிவித்தார்.

முதல் அமெரிக்க ஆஸ்பத்திரி கப்பலாகிய 'சோலஸ்' என்பது 6000 டன் எடையுள்ளது. இதில் 400 நோயாளிகளுக்கு சிகிச்சை செய்யப் போதிய வசதியிருக்கின்றது. இதில் 13 டாக்டர்களிருக்கின்றனர்.

அமெரிக்க பிரயாணிகளை ஏற்றிச் சென்ற 'ஸாம் ஸாம்' கப்பலை ஜெர்மனி மூழ்கடித்ததிலிருந்து அமெரிக்க ஆம்புலென்ஸ் பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ் விகோவரி என்பவரும், புகையிலை வியாபாரியாகிய பெட் லாபிங்ஹவுஸ் என்பவரும் காணப்படவில்லை என்றும், அவர்களைப்பற்றிய முழு விவரங்களை உடனே தெரிவிக்கவேண்டுமென்றும் அமெரிக்கா ஜெர்மனியைக்கேட்டிருக்கிறது.

விரோதி விமானங்கள் வருவதை எச்சரிக்கை செய்யும் ஒரு புதிய கருவி இப்போது அமெரிக்காவில் உபயோகத்திலிருக்கின்றது. இது பிரிட்டிஷ் ரேடியோ—தரிசினியைப்போலவேயிருக்கின்றது.

ஸ்விட்சர்லாந்திலுள்ள 'பாஸ்லர் நாச்ரிக்டன்' பத்திரிகையின் பெர்லின் நிருபர், ரஷ்ய யுத்த செய்திகளைக்காட்டிலும், அமெரிக்காவிற்கு விரோதமான பிரசாரத்திற்கே ஜெர்மன் பத்திரிகைகள் முக்கிய ஸ்தானம் கொடுத்திருக்கின்றனவென்று கூறுகிறார். பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், தென் அமெரிக்காவில் ராணுவ, அரசியல் எதேச்சாதிகாரம் செய்ய முயற்சிப்பதாக ஜெர்மனி பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது. டாக்கார், அஸோர்ஸ் தீவுகளை அமெரிக்கா கைப்பற்றப்போகிறதென்ற பொய்க்கதையை ஜெர்மன் பத்திரிகைகள் கட்டி விளம்பரப்படுத்தியிருக்கின்றன. இதனால் யுனைடெட் ஸ்டேட்ஸி (வட அமெரிக்காவி)ற்கும், தென் அமெரிக்காவிற்கும் இருந்த நட்பு இன்னும் அதிகமாயிருக்கின்றது.

நார்த்தாம்டன், சால்ட்லேக் சிடி என்ற இரண்டு பெரிய அமெரிக்க யுத்த கப்பல்கள் கிழக்கு ஆஸ்திரேலியத் துறைமுகமாகிய பிரிஸ்பேனுக்குத் திடீரென்று வந்துசேர்ந்து ஐந்து நாட்களிருந்துவிட்டுப் பிறகு எங்குபோயிருக்கின்றன என்பது தெரியவில்லை.

அமெரிக்கா, இப்போது எஃகு சேகரிக்க ஏற்பாடு செய்து வருகிறது. வருகிற செப்டம்பர் மீ 1உயிலிருந்து எஃகு என்ன உபயோகத்திற்கு, எவ்வளவு வேண்டுமென்று, ஒரு தனி பாரத்தில் பொதுமக்கள் எழுதி சர்க்கார் அனுமதி பெறவேண்டுமென்று அமெரிக்க பாதுகாப்பு இலாக்கா ஒரு உத்திரவு போட்டிருக்கின்றது.

## 4. கிரீசும், இந்தாலியும்.

யுத்த அரசியல் மந்திரியாகிய கேப்டன் மார்கெஸ்ஸன் என்பவர் பிரிட்டன், கிரீசிலும், கிரீட் தீவிலும் அடைந்த நஷ்டங்களைப்பற்றிய விவரங்களைப் பார்லிமெண்ட் சபையில் தெரிவித்திருக்கின்றார்.

ஜெர்மன் தாக்குதலுக்கு முன்பு, கிரீசில் இருந்த பிரிட்டிஷ் துருப்புகளின் எண்ணிக்கை, 57,757. இவர்களுள் 44,865 பேர் வெளியேறினர். பிரிட்டிஷார் 24,100 பேர் முதலில் இருந்தனர்; இவர்களுள் 16,442 பேர் வெளியேறினர். 17,125 ஆஸ்திரேலியர்களுள் 14,157 பேர் வெளியேறினர். 16,532 நியூஜிலண்டியர்களுள் 14,266 பேர் வெளியேறினர்.

மத்தியதரைக் கடலிலுள்ள கிரீட் தீவில், ஜெர்மன் தாக்குதலுக்கு முன்பு துருப்புகளின் மொத்த எண்ணிக்கை 27,550; 14,500 பேர் வெளியேறினர்; 14 000 பிரிட்டிஷ்காரர்களுள் 7.130 பேர் வெளியேறினர். 6,450 ஆஷ்திரேலியர்களுள், 2890 பேர் வெளியேறினர். 7.100 நியூஜிலண்டியர்களுள் 4,560 பேர் வெளியேறினர்.

முஸலோனியின் சிறிய புதல்வராகிய ப்ரூனோ முசலோனி என்பவர், இத்தாலியில் பைசா நகரத்திற்கருகில், ஒரு புதிய விமான விபத்தில் இறந்துபோனார். இவருடன் அந்த விமானத்திலிருந்த ஏழு உத்தியோகஸ்தர்களும் இறந்தனர். இவருக்கு ஒரு மனைவியும் 18 மாதப்பெண் குழந்தையும் உண்டு.

முஸலோனி உடனே பைசா நகரத்திற்குத் தன் பெரிய மகனாகிய விட்டோரியோவுடன் சென்றார். பிரிடாப்பியோவிலுள்ள குடும்ப கல்லறையில் சவ அடக்கம் சென்ற சனிக்கிழமை நடந்ததெனத் தெரிகிறது.

## 5. பால்கன்ஸ், சிரியா, துருக்கி, ஈரான் முதலியன.

சிரியா சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு ஏஹபா விரோதிகளால் தாக்கப்பட்டது. சேதமொன்றுமில்லை.

துருக்கி இஸ்டான்புல் எக்ஸ்பிரஸ் ரயிலில் அநேக ஜெர்மானியர்கள் இரானுக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். ஜெர்மானியர்களை ஈரானுக்குள் அதிகமாக அனுமதிக்கக்கூடாதென்ற விஷயத்தைப் பற்றி பிரிட்டனும், ரஷ்யாவும் ஈரான் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது. ரஷ்யாவிற்கு எதிரிடையாக எந்த தேசமும் ஈரானை ராணுவ தளமாக உபயோகித்தால் ரஷ்ய துருப்புகள் இரானிய எல்லைக்குள் பிரவேசிக்கலமென்று 1921-ல் ஈரான் மன்னருடன் ரஷ்யா செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஸ்டாலின், இரானிய சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

சமீபத்தில் ஈராக்கில் நடந்த சண்டைக்குமுன் "யாத்ரீகர்கள்" என்று சொல்லிக்கொண்டு 3,000 ஜெர்மானியர்கள் ஈராக்கில் நுழைந்து, வேலை செய்வதற்கும், வெளியேறுவதற்கும், சௌக்கியமான இடமாகிய டாப்ரிஸ் என்ற ஊரில் அதிகமாகக் கூடி இருந்தனர். இவர்களை அனுமதித்தது பிரிட்டனுக்கு கலவரத்தை உண்டுபண்ணிற்று. ஏனென்றால், இவர்கள் தங்களுடைய உடைகளை மாற்றிக்கொண்டு உடனே இராக்கிய புரட்சிக்காரர்களுக்கு வேண்டிய உதவி அளிக்கக்கூடும்.

இராக்கிலும், சிரியாவிலும் பிரிட்டிஷார் நாஜிகளைத் துரத்தியடித்தபடி இரானிலும் துரத்தியடித்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று அங்காரா (துருக்கி) ஒலிபரப்பு நிருபராகிய மார்டின் அக்ரான்ஸ்கி கூறுகிறார்.

அங்காராவிலுளள ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு கூறுகின்றார் :—

"ஒரு ஸ்பெஷல் ஆகாய விமானத்தில் இரண்டு பெரிய ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் இஸ்டான்புல் (துருக்கி)லிற்கு வந்து, ஜெர்மன் ஸ்தானிகராகிய வான் பேபனைச் சந்தித்து ஈரானுக்குக் கூடிய சீக்கிரத்தில் புறப்பட்டுப் போவார்கள். ஈரானில் ஜெர்மானியர் செய்யும் வேலைகள் மத்திய கிழக்கரங்கத்தில் கலவரத்தை உண்டு பண்ணியிருக்கின்றது.

"ஈரான் விஷயத்தில் துருக்கியின் போக்கும் விளக்கமாயிருக்கின்றது. ஈரான் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்று துருக்கி கருதுகின்றது. ஈரானிய சர்க்கார் சமாதான நிலையை ஏற்படுத்துமென்றும், நடுநிலைமை வகிக்குமென்றும் துருக்கி எதிர்பார்க்கின்றது."

ஐந்து ஜெர்மன் வியாபார நிபுணர்கள் துருக்கியில் வியாபாரம் செய்ய, துருக்கி-ஜெர்மன் வியாபார ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று கேட்டதற்கு ரஷ்ய நிலைமை விளக்கமான பிறகு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று துருக்கி அறிவித்துவிட்டது.

துருக்கியில் ராணுவத்தில் சேரவேண்டியவர்களின் வயது 20 என்று குறிப்பிட்டிருந்தபோதிலும்,

விசேஷமேற்பட்டால் 19 வயதுள்ளவர்களும் சேருவதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று துருக்கி சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கின்றனர்.

பஸ்ரா மூலமாக துருக்கிக்கு ரயிலிலும், கப்பல்களிலும், ராணுவ சப்ளைகள் துரிதமாக பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், வந்து கொண்டிருக்கின்றனவென்று, லண்டன் 'டெய்லி மெயில்' பத்திரிகையின் பஸ்ரா நிருபர் தெரிவிக்கின்றார்.

## 6. கப்பல் நிலைமை.

பிரிட்டிஷ் கடற்படை இலாகா அறிக்கை கூறுவதாவது:—'டிபெண்டர்' என்ற பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. ஆனால் உயிர்ச்சேதமொன்றுமில்லை.

'ஜா ஜிக்' என்ற பிரிட்டிஷ் ஸ்டீமர் விரோதியினால் முழுகடிக்கப்பட்டது. அப்போது அதில் துருப்புகளொன்றுமில்லை. ஒருவர் மாத்திரம் இறந்தார்.

அட்லாண்டிக் கடலில், கானரி தீவுகளுக்கு 500 மைல் தெற்கில் 'செயின்ட் ஆன் செல்ம்' என்ற சாமான கப்பல் விரோதி டார்பிடோ குண்டுகள் பட்டு 15 நிமிஷங்களில் முழுகிவிட்டது. இதிலுள்ளவர்களில் 16 பேர் 'டாம்' என்ற ஸ்பானிஷ் ஸ்டீமரால் காப்பாற்றப்பட்டனர். இவர்கள் 18 நாட்களாக ஒரு திறந்த படகில் கஷ்டங்களுடன் கிடந்து ஜூலை 17-ம் தேதி காப்பாற்றப்பட்டனர். மூழ்கிய கப்பல் தலைவரும், ஐந்து உத்யோகஸ்தர்களும், 10 இந்தியர்களும் உள்ள மற்றொரு படகு காணப்படவில்லை. காப்பாற்றப்பட்டவர்களில் 8 இந்தியர்கள் கல்கத்தாவிலிருந்து போனவர்கள்.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்.

இண்டோ-சீனாவில் எவ்வளவு ஜப்பானியத்துருப்புகள் இருக்கலாமென்று ஒப்பந்தப்படி ஒப்புக்கொள்ளப்பட்டதோ, அதில் மூன்றில் இரண்டு பங்கு முன்னமேயே சைகோனுக்கு வந்துவிட்டது; பாக்கி இன்னும் ஒரு வாரத்திற்குள் வந்துவிடும். ஜப்பானியர், நிரந்தரமானதாயும், திறமையாய்ந்ததுமான ஒரு ஆகாய விமானதளத்தை சைகோனில் உண்டாக்க ஏற்பாடு செய்துவருகின்றனர்.

'மார்ஷல் ஜாப்ரி' என்ற பிரஞ்சுகப்பலில் 55 அமெரிக்கர்கள் சைகோனிலிருந்து மணிலாவிற்குப் புறப்பட்டனர். 15 பிரிட்டிஷ் காரர்கள் சிங்கப்பூருக்குப்போய் விட்டனர். சைகோனில், ஸ்தானிகரும் அவரது சிப்பந்திகளும் உள்பட 15 பிரிட்டிஷாரே இருப்பார்கள்.

ஜப்பானியர் ஆதிக்கத்திலுள்ள சீனப்பகுதிகளிலிருந்து டச்சுக்காரர்கள் வெளியேறுமாறு ஆலோசனை கூறப்பட்டதாக ஷாங்கையில் சொல்லப்படுகிறது. வட, மத்திய சீனாவில் சுமார் 450 டச்சுக்காரர்களிருக்கின்றார்கள்.

ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனியைச்சேர்ந்த 'மெய்யோ' என்ற அமெரிக்க எண்ணெய்க்கப்பல்—(2000 எண்ணெய் பீப்பாய்கள் கொண்டது) யாங்ட்ஸீ நதியில் ஜப்பானிய கடற்படையால் கைப்பற்றப்பட்டது. இந்த எண்ணெய் சீனருக்குப் போபுரிய உபயோகிக்கப்படும் என்ற காரணத்தைக்காட்டி பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. கப்பல் மாத்திரம் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனிக்குக் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஜப்பானை மற்ற நாடுகள் பொருளாதாரமூற்றுகை செய்வதைப்பற்றி தங்களுடைய கருத்தென்ன என்று ஜெர்மன் நிருபர்கள், ஜப்பான் அந்நிய நாட்டு மந்திரியாகிய அட்மிரல் டோயாடாவைக் கேட்டதற்கு, அவர், "ஜப்பானைச் சூழ்ந்துகொள்ள மற்ற நாடுகள் என்னமுறையை அனுசரித்தபோதிலும் அல்லது அனுசரிக்க ஏற்பாடு செய்தபோதிலும், இப்பொழுது எந்தப் பாதையில் ஜப்பான் செல்கின்றதோ அதை விட்டு வேறு பக்கம் திரும்பாது" என்று எழுத்துமூலமாக அந்த நிருபர்களுக்குத் தெரிவித்திருக்கிறார். பிறகு பிரிட்டன், அமெரிக்கா நாடுகளின் போக்கை ஜப்பான் முக்கியமாகக் கவனித்து வருகிறதென்றும் தெரிவித்தார்.

ஜப்பானியர்கள், மஞ்சுகுவோ எல்லைப்புறத்தில், இன்னும் ஒரு லக்ஷம் பேர்களைக் கொண்டுபோய் டலப்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய சர் ராபர்ட் கிரெய்கியும் அமெரிக்க ஸ்தானிகராகிய க்ரூவும், டோகியோ (ஜப்பான்) விலிருப்பதாகவும், அந்நிய நாட்டுக் காரியாலயத்தில் கலந்து ஆலோசிப்பதாலும், முக்கியமான சம்பவங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேயாவை விட்டு ஜப்பானியர்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். சிங்கப்பூரிலுள்ள 300 ஜப்பானியர்களை வெளியேற்ற ஒரு கப்பல் ஸ்பெஷலாய் அனுப்பவேண்டுமென்று ஜப்பானிய சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள்.

1936-ல் ஜெனரல் சியாங்கை-ஷேக்கை கடத்திச் சென்றவர்களுள் பிரபல தலைவராகிய மார்ஷல் சாங்சியூ லியாங் இப்போது விடுவிக்கப்படுவார். மஞ்சூரியாவில் (சீனாவில்) 300,000 கொரில்லாக்கள் (குரங்குச் சண்டை போடுபவர்கள்) சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். சாங்சியூ-லியாங் வட கிழக்குப் பிரதேசங்களிலுள்ள இவர்களெல்லோரையும் ஒன்று சேர்த்துத் தலைவராக இருப்பார் என்று தெரிகிறது.

யாங்க்ட்ஸி நதிக்கரைப்பட்டணமாகிய இச்சாங்கை சீனர் பிடித்துக்கொண்டனர். கொல்லப்பட்ட 1700 பேரைவிட்டு விட்டு ஜப்பானியர் வெளியேறினர்.

மஞ்சுகுவோவிலுள்ள டைரன், ஹார்பின் முதலிய பெரிய பட்டணங்கள் யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன. பந்தோபஸ்து முறைகளும் கையாளப்பட்டு வருகின்றன. யுத்த சப்ளை சாமான்கள் நகரங்களின் தெருக்களில் எங்கெங்கோ கொண்டு போகப்படுகின்றன. அந்நிய நாட்டினர் வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது. டைரன் பட்டணத்தில் ஒரு அந்நியர் மயிர்வெட்டிக்கொள்ள வெளியே போகப் புறப்படும்போது, ஹோட்டலை விட்டு வெளியே எங்கும் போகக்கூடாதென்று கூறப்பட்டது; தற்காலிகமாக வந்த அந்நியர்கள் அங்கே அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

வட இண்டோ-சீனாவில் ஜப்பானியர்கள் பிரவேசித்தது, சீனாவின் தென்மேற்குப் பிரதேசங்களை பாதிக்கும். க்வாங்சி, யுன்னான் எல்லைப்புறங்களில், சீன யுத்த முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன.

24-மணி நேரங்களில் சுங்கிங் ஐந்து தடவை ஜப்பானியர்களால் தாக்கப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர். ஜப்பானியர் 400 ஆகாய விமானங்களை உபயோகித்தனர் என்றும் 3,000 குண்டுகளைப் போட்டனர் என்றும் தெரிகிறது. இதற்குப் பிறகு புசல் காற்றும் மழையும் வந்ததனால் சீனமக்கள் உணவில்லாமலும், உறக்கமில்லாமலும் ஓய்வில்லாமலும் பூமிக்கு அடியிலிருக்கும் மறைவிடங்களிலிருந்து கஷ்டப்பட்டார்கள்.

இண்டோ-சீனா எல்லைப்புறத்தில் சீனத் துருப்புகள் கொண்டுபோகப்படுகின்றன. கேந்திர ஸ்தானங்களில் தாய்லாந்து துருப்புகளும் இருக்கின்றன. தாய்லாந்து நடுநிலைமை வகிக்குமென்றும், சகல பாதுகாப்பு முறைகளையும் கையாளுமென்றும், சுயேச்சையை விட்டுக்கொடுக்காதென்றும் பாங்காக்கிலுள்ள ராய்ட்டர் நிருபர் தெரிவிக்கிறார்.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து தாய்லாந்து விரிகுடாவில் இருந்த, 10,000 டன் எடையுள்ள இரண்டு ஜெர்மன், இத்தாலிய சாமான் கப்பல்கள், நழுவி எங்கேயோபோய்விட்டன. அந்த கப்பல்களில் இருந்த தாய்லாந்தின் இரண்டு சுங்கக்காரர்களையும் காணோம். கப்பல்கள் சைகோனுக்குப் போயிருக்கக்கூடும். இரண்டு இத்தாலிய கப்பல்கள் தாய்லாந்து கடலில் தஞ்சம் அடைந்திருக்கின்றன.

சென்ற திங்கட்கிழமை பிரிட்டிஷ் ஸ்தானிகர் சர் ராபர்ட் கிரெய்கியும் ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி அட்மிரல் தோயாடாவும் சந்தித்துப் பேசியது இரகசியமாகவே இருக்கின்றது. அமெரிக்க ஸ்தானிகராகிய மிஸ்டர் ஜோசப் க்ரூவும், அட்மிரல் தோயாடாவைக் கூடிய சீக்கிரம் சந்திப்பார் என்று தெரிகிறது.

## 8. விஷி.

பிரான்ஸ் இப்போது பாஸிஸ்ட் தேசமாக மாறிவிட்டது. அட்மிரல் டார்லான் பிரெஞ்சு சர்வாதிகாரியாய்விட்டார். மார்ஷல் பீத்தான் தன்னுடைய புதிய திட்டங்களை எடுத்து கூறும்போது, "பிரதிநிதித்வ குடியரசு இப்போது இறந்துவிட்டதென்று தெரிவித்தார். பிரெஞ்சு துருப்புகள் எல்லாவற்றிற்கும் அட்மிரல் டார்லானே தலைவர். மார்ஷல் பீத்தான் புதிய மந்திரி சபையை நியமித்திருக்கின்றார். அட்மிரல் டார்லான் தேசிய பாதுகாப்பு மந்திரியாயிருப்பதுடன், அயல்நாட்டு மந்திரியாயும், கடற்படை மந்திரியாயும் இருப்பார். பிரான்சிலுள்ள எல்லா அரசியல் கக்ஷிகளும் கலைக்கப்பட்டன.

ஜெனரல் வேகண்டு, மார்ஷல் பீத்தானையும், அட்மிரல் டார்லானையும் சந்தித்து பேசிவிட்டு வட ஆப்பிரிக்காவிலுள்ள அல்ஜியர்சுக்குப் போய்விட்டார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அட்மிரல் டார்லான் தன் சகாக்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது அந்த கட்டடத்திற்கு முன்பாக ஒரு பாம் (வெடி குண்டு) விழுந்து வெடித்தது. விஷி வட்டாரங்கள் இந்தச் செய்கையை கண்டிக்கின்றன.

அமெரிக்க, விஷி தொடர்பு கூடிய சீக்கிரத்தில் அற்றுப்போகும் என்பது ஆச்சரியமானதல்ல. வரவர விஷி, ஜெர்மனிக்கு அதிக தாழ்மையாக நடந்து கொள்வதுடன், சீனுக்காரர்களிடமிருந்து இண்டோ–சீனாவிலுள்ள ஜப்பானிய துருப்புகளைப் பாதுகாக்க, பிரெஞ்சு துருப்புகளை யுன்னன், க்வாங்சி மாகாணங்களின் எல்லையோரங்களுக்கு அனுப்பச் சம்மதித்ததாயும் தெரிகிறது. இது ஜெர்மானியர்களின் வற்புறுத்தலின்மேல்தான் நடந்ததென்று தெரிவிக்கப்படுகின்றது. டார்லான் புதிய மந்திரி பதவி வகித்த பிறகு 48-மணி நேரங்களுக்குள் டார்லானுக்கும் வேகண்டிற்கும் பலத்த சச்சரவு உண்டாகுமென்று "நியுயார்க் டைம்ஸ்" பத்திரிகை கூறுகின்றது.

### 9. ஜெர்மன் அதிக்கிரமத்திலுள்ள நாடுகள்.

நார்வேயின் மீது பிரிட்டன் படையெடுப்பதைத் தடுக்க ஜெர்மானியர்கள், நார்வீஜியர்களெல்லோரையும் வெளியேற்றிவிட்டு, அவர்களுடைய தந்தியில்லாக்கம்பி சமாச்சாரம் அனுப்பும் கருவிகளையும் பறிமுதல் செய்தனரென்று தெரிகிறது. ஆஸ்லோவிலுள்ள கப்பல் தொழிலாளிகள், நார்வேயிலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்கு அனுப்பும் சாமான்களை கப்பலிலிருந்து இறக்க மறுத்துவிட்டனர். இதனால் தடங்கலேற்பட்டு வேறு ஆட்கள் தேடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

செகோஸ்லோவக்கியாவில், 520 நியூஸ் பேப்பர்களையும், நூறு வருடங்களாக நடந்து வந்த செக் மீயூசியம் என்ற சஞ்சிகையுள்பட 1,700 சஞ்சிகைகளையும் பிரசுரிக்கக்கூடாதென்று ஜெர்மானியர் தடுத்துவிட்டனர். அச்சுத்தாள் குறைவாக இருப்பதே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஜெர்மனியில் மாத்திரம் எப்போதும்போல், அதே 'சைசில்' நியூஸ் பேப்பர்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

ருமேனியாவிலிருந்து ரஷ்ய கிழக்கரங்கத்திற்குக் கொண்டுபோகப்பட்ட துருப்புகளில் 1 லக்ஷம் பேர் இறந்தது ருமேனியாவில் மனக்கலக்கத்தை உண்டு பண்ணியிருக்கின்றது.

யுகோஸ்லியாவியர்கள், ஜெர்மனிக்கு எதிரிடையாக, புரட்சிசெய்து கைகலந்த சண்டைகளும் கொரில்லா (குரங்கு) சண்டைகளும் யுகோஸ்லாவியாவில் பலவிடங்களில் உண்டாக்கியிருக்கின்றனர், இந்தப் புரட்சியை அடக்க பலர் கைதியாக்கப்பட்டனர். அநேகர் சுட்டுக்கொல்லப்பட்டனர். தெருக்களில் போகுபவர்களைச் சந்தேகப்பட்டால் ஜெர்மானியர் உடனே சுட்டுவிடுகின்றனராம். சாக்ரெப்பில் 98 பேர்களும், பெல்கிரேடில் 216 பேர்களும், வாஜ்வோடினுவில் 90 பேர்களும் சுடப்பட்டனர். பலருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. செர்பியர்கள் தான் அதிகமாக புரட்சி செய்கின்றனர். மலைகளில் மறைந்திருந்து இரவில் ஜெர்மானியர்களைத் தாக்குகின்றனர்.

போலிஷ் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. இதனால் போலண்டு–ரஷ்ய கிழக்கு அரங்கப் போக்குவரத்துத் தடைப்படுவது, ஜெர்மனியைப் பெரிதும் பாதிக்குமென்று தெரிகிறது.

### 10. நடுநிலைமை நாடுகள்.

தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜெண்டீனாவிலிருந்த ஜெர்மன் ஸ்தானீகர், தந்தியில்லாக்கம்பி கருவிகள் அடங்கிய மூன்று பார்ஸல்களை அர்ஜெண்டீனா அயல்நாட்டு மந்திரியிடம் கொடுத்த பிறகு அச்சுப் பிரசாரவேலை அங்கே செய்வதில்லை என்று ஒப்புக்கொண்டார். அந்த கருவிகள், சமீப காலத்தில் ஜெர்மன் ஸ்தானீகரின் சாமான்களை சர்க்கார் பரிசோதித்ததில் கிடைத்தவை.

தென் அமெரிக்காவில், சிலி தேசத்தில் நாஜிகளின் இரகசிய பிரசாரவேலை கண்டு பிடிக்கப்பட்டு பல ஜெர்மானிய தலைவர்கள் கைதியாக்கப்பட்டனர்.

### 11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.

ஜெர்மன் 68-ம் படை மூன்று நாள் சண்டையில் அழிக்கப்பட்டதென்று ரஷ்ய சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது. காயமடைந்தவர்கள் இறந்தவர்களுள்பட மொத்தம் 7,500 பேரை ஜெர்மனி இழந்தது.

ஜெர்மன் ஆகாயப்படை மூன்று கூட்டங்களாக வந்து லெனின்கிராடைத் தாக்கி விமான எதிர்ப்புப் பீரங்கியால் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டன. மூன்று விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மாஸ்கோவிலிருந்து ஒரு அறிக்கை பின் வருமாறு கூறுகிறது :—

"சென்ற திங்கட்கிழமை மொத்தம் 41 ஜெர்மன் ஆகாய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 34 ரஷ்ய விமானங்கள் இழக்கப்பட்டன.

மாஸ்கோ தாக்குதலில் 2 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்த பட்டன.

பால்டிக் கடபல் படையும், ஆகாய விமானப் படையும், விரோதி டார்ப்பிடோ கப்பல்களையும் 2 சாமான் எற்றிச் செல்லும் கப்பல்களையும் மூழ்கடித்தன."

கருங்கடல் துறைமுகப் பட்டணமாகிய கான்ஸ்டான்சாவிற்கு 100 மைல் தூரத்தில் செர்னேவடிக் கருகில் டான்யூப் நதிக்கு குறுக்கேயுள்ள ருமேனிய ரயில்வே பாலத்தை ரஷ்ய ஆகாயப்படை குண்டு போட்டு அழித்துவிட்டது. இது ஒரு பெரிய முக்கியமான பாலம். இதன் நீளம் 2,435 அடி.

கான்ஸ்டன்ஸா துறைமுகத்திலிருந்த கப்பல்களை ரஷ்ய விமானங்கள் தாக்கின. சுமார் 60 அல்லது 70 பின்னிஷ், ஜெர்மன், விமானங்கள் மர்மான்ஸ்க் பிரதேசத்தை தாக்கும்போது ரஷ்ய விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு சீர் குலைந்தன.

பெர்லின் ராணுவ லட்சியங்களின்மீது ரஷ்ய விமானங்கள் குண்டுகளைப்போட்டுத் தாக்கின.

தென் யூக்ரெய்னில் ரஷ்ய துருப்புகளை ஜெர்மன் துருப்புகள் கருங்கடல் வரைக்கும் துரத்தியிருப்பதாக ஜெர்மன் ராணுவ அறிக்கை கூறுகிறது. மாஸ்கோவிற்கு மேற்கிலுள்ள முக்கிய ரயில்வே ஜங்ஷன்களையும் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்மோலென்ஸ்க் (ரஷ்யா) பட்டணம் இப்போது ஒரு மயானமா யிருக்கின்றது. ஜெர்மானியர்கள், இதைப் பிடிக்க பிரம்மப் பிரயத்தனப்பட்டு, பல வாரங்களாகக் கடுமையான சண்டைபோட்டுக் கடைசியில் பிடித்தனர். பிடித்தும் பிரயோஜனமில்லை. ஜெர்மன் பத்திரிகைகளில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது :—முன்னணியிலுள்ள ஜெர்மன் துருப்புகள் ஸ்மோலென்சிற்குள் பிரவேசித்ததும் வீடுகள் தீப்பற்றி யெறியும் உஷ்ணம் தாங்காமல் வெளியேறினர். ஜெர்மானியர்கள் பட்டணத்திற்குள் வந்த பிறகு ரஷ்யர்கள் தங்கள் வசமிருந்த ஆகாய விமான தளத்திலிருந்து பட்டணத்தின்மேல் சரமாரியாக குண்டுகளைப் போட்டனர். நாஜிகள் ஒரு வெள்ளை ரஷ்ய வக்கீலை பாழாய்ப்போன பட்டணத்திற்கு மேயராக நியமித்திருக்கின்றனர்.

ரஷ்ய கொரில்லா துருப்புகள், 16 வண்டிகள் கோர்க்கப்பட்ட ஜெர்மன் துருப்பு ரயில், வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது மற்றொரு ரயிலை எதிர்ப்பக்கம் வேகமாக விட்டு தாக்குதலில் சின்னாபின்னமாகும்படி செய்தனர்.

ரஷ்யர்கள் போடும் புதுமாதிரி குண்டுகளில் பெட்ரோல் எண்ணெயிருப்பதால், விழும் இடங்களில் தீ உடனே பரவுவதற்கு அனுகூலமா யிருக்கின்றது. பின்னிஷ் துருப்புகள்மேல் இந்த குண்டுகளைப் போட்டதில் அவர்களுக்கு உடம்பில் பல விடங்களில் பெரிய கொப்புளங்கள் உண்டாயினவென்று தெரிகிறது.

ஓடெஸ்ஸாவை ஜெர்மானியர்கள் தாக்கிக்கொண்டே யிருக்கின்றனர். அவர்கள் நிகோலையேவிற்கு 70 மைல் தூரத்திலிருப்பதாகத் தெரிகிறது.

ரஷ்ய யுத்த ஆரம்பத்திலிருந்து ருமேனியாவிற்குள் ரஷ்ய பாரசூட்டுக்காரர்கள் (ஆகாய விமான விரிப்புக் குடைக்காரர்கள்) இறங்கிக்கொண்டே யிருக்கின்றனர் என்று தெரிகிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இனபர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.